<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பூர்</u>

அசல் வழக்கு எண்.297/2011

இன்று 2026 ம் ஆண்டு மார்ச் திங்கள் 10 ம் நாள் இன்று இந்த வா.சா.1ன் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.A.வனிதா, M.S.W., L.L.B., அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : நஞ்சப்பன் | தொழில் | : |
| தகப்பனார் பெயர் / கணவர் பெயர் | : ரங்கசாமி | கிராமம் | : கவுண்டநாயக்கன் பாளையம் |
| வயது | : 47 | தாலூக்கா | : திருப்பூர் |
| நாள் | : 10-03-2026 | மாவட்டம் | : திருப்பூர் |

<u>**சாட்சி மீண்டும் முன்னிலையாகி சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு 7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :**</u>

1. தாவாவில் என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் நான்குபுறமும் அளந்து கல் நாட்டவேண்டும் என்று தாக்கல் செய்துள்ளேன். அளக்க வேண்டும் என்று சொல்லும் சொத்தின் அளவு என்ன என்றால் 40 செண்ட் ஆகும். 40 செண்ட் எனக்கு செக்குபந்தியுடன் பாத்தியமா பொதுவில் பாத்தியமா என்றால் பொதுவில் பாத்தியம். தொட்டிபாளையம் கிராமம் க.ச.எண்.438/2 மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3.25 ஏக்கர் ஆகும். 3.25 ஏக்கர் சொத்து யாராருக்கு பாத்தியம் என்றால் 7ம் பிரதிவாதி, என் தாயார் மற்றும் சிவக்குமாருக்கு பாத்தியம்.

2. மூன்று பாகஸ்தர்களுக்கு இடையில் தான் எல்லை பிரச்சினை என்றால் சரிதான். எனக்கு சொத்து எப்படி பாத்தியம் என்றால் என் அப்பா வழியில் பாத்தியம். எந்த வருடத்தின் ஆவணப்படி எவ்வளவு பாத்தியம் என்று சொல்ல முடியுமா என்றால் எனக்கு தெரியாது. க.ச.எண்.438/2 காலையில் எனக்கு 40 செண்ட் பாத்தியம் என்பதைக் காட்ட மூல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

3. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.1 ஆவணம் 04.07.2006ம் தேதியிட்ட பாக பாத்திய விடுதலைப் பத்திரத்தின்படி நான் உரிமை கோருகிறேன் என்றால் சரிதான்.

நான் என்ன படித்துள்ளேன் என்றால் 6ம் வகுப்பு படித்துள்ளேன். எங்கள் குடும்பத்தில் எத்தனை பேர் என்றால் நாங்கள் இரண்டு பேர். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உரிமையை குறிப்பிடும்போது ரங்கசாமி நாயக்கருக்கு பிதுராஜித வகையிலும் பட்டாப்படி பாத்தியம் என குறிப்பிட்டுள்ளதே தவிர ஆவணங்கள் விவரம் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். பட்டா உட்பிரிவு யார் பெயரில் எந்த ஆவணத்தின்படி ஏற்பட்டது என்றால் எனக்கு ஞாபகமில்லை.

4. மூல ஆவணங்கள் பொதுவில் உள்ளது என்றால் சரிதான். மூல ஆவணங்கள் பொதுவில் உள்ள நிலையில் நான் செக்குபந்தி கண்டு எழுதி உள்ளதற்கு காரணம் என்ன என்றால் எல்லாரும் எழுதி உள்ளார்கள். அதனால் நானும் அவ்வாறு எழுதினேன். 7ம் பிரதிவாதி ரங்கசாமிக்கு எவ்வளவு பாத்தியம் என்றால் தாவா காலையில் 20 செண்ட் பாத்தியமாகும். தாவா காலையில் 7ம் பிரதிவாதிக்கு 32 செண்ட் பாத்தியம் என்றால் சரியல்ல.

5. சிவக்குமாருக்கும் க.ச.எண்.438/2 காலையில் பங்கு இருப்பதால் அவரையும் தாவாவில் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 1 முதல் 6 பிரதிவாதிகள் சிவக்குமாரின் வகையறாக்கள் என்றால் சரிதான். 1, 2 பிரதிவாதிகளான சிவக்குமார், ராஜேந்திரனுக்கும் சொத்தில் பங்கு இருப்பதாக தாவா தாக்கல் செய்துவிட்டு, பின்னிட்டு அவர்களை வழக்கில் இருந்து ஏன் நீக்கறவு செய்தேன் என்றால் எனக்கு தெரியவில்லை. 1,2 பிரதிவாதிகளை தாவாவில் இருந்து நீக்கறவு செய்தது சட்டப்படி சரியானதல்ல. அவர்களை நீக்கி விட்டு சொத்துக்களை அளக்கவேண்டும் என தாக்கல் செய்துள்ள இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6. சொத்துக்களை பத்திரப்படி அளக்க வேண்டுமா அல்லது பட்டாப்படி அளக்க வேண்டுமா என்றால் பத்திரப்படி அளக்கவேண்டும். வா.சா.ஆ.1 ஆவணம் எதன் அடிப்படையில் ஏற்பட்டது என்றால் அனைவரும் சமாதானமாக போய் ஏற்பட்டது. வா.சா.ஆ.1ல் 7ம் பிரதிவாதி கையொப்பம் செய்துள்ளாரா என்றால் இல்லை. க.ச.எண்.438/2 ல் உள்ள 3.25 ஏக்கர் சொத்து எப்போது எந்த ஆவணத்தின்படி யாராருக்கு பிரிக்கப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. அதற்கான ஆவணம் எதுவும்

தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. 7ம் பிரதிவாதி 32 செண்ட் இடத்தில் சுவாதீனத்தில் இருந்து கட்டிடம் கட்டி உள்ளார் என்றால் சரியல்ல. 20 செண்ட் இடத்தில் தான் உள்ளார். வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள செக்குபந்தி, அளவுகளுக்கான மூல ஆவணம் தாக்கல் செய்யாததால் இந்த தாவா செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

சாட்சி கூறியபடி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்துப் பெறப்பட்டது.

VANITHA

Digitally signed by VANITHA
Date: 2026.03.10 02:34:57 +1100

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருப்பூர்.